9th August 1960]

SRI A. VEDARATHNAM : இங்கிருந்து அந்த இரும்பை வெளியே கொண்டுபோகும் நேரத்திலே, அதை மறுபடியும் நம் முடைய இராஜ்யத்திலே கொண்டுவந்துதான் விநியோகிக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையின்பேரில் அவர்கள் இந்த மா நிலத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்கு அனுமதி கொடுக்க முடியாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவ்விதமான அதிகாரம் சர்க்காருக்கு இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : எடுக்கப்பட்ட தண்ட வாளங்கள் ஏராளமான ஸ்டாக் சென்னையிலேயே இருக்கிறது என்று சர்க்காருக்குத் தெரியுமா ? இதற்குத் தனிப்பட்ட விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் அந்த விலைக்கு அதிகமாக அவர்கள் விற்க முடியாது என்றும் சர்க்காருக்குத் தெரியுமா ? இதைப் பயன்படுத்த முடியும் என்றால், அதுபற்றி சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்துப் பார்த்ததா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இதைப் பயன்படுத்து வதாக சர்க்காருக்கு இப்பொழுது யோசனை இல்லை. கனம் அங்கத்தினர் சொல்லிய மற்ற விஷயங்களையெல்லாம் நான் தகவ லாக எடுத்துக்கொள்ளுகிறேன்.

Schemes for the welfare of women and children

*58 SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) சென்னை செகரடேரியட்டில் 1960-ம் வருடம் மே மாதம் 18-ந் தேதி ராஜ்ய சமூக க்ஷேம நல போர்டுடன், அபி விருத்திக் கமிஷனர் திரு. ஆர். ஏ. கோபால்சாமி அவர்கள் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் விளைவாக பெண்கள், குழந்தைகளுக் கான எதிர்கால வேலைத்திட்டத்தைக் குறித்து பரிமாறிக் கொண்ட கருத்துக்கள் நம் ராஜ்ய சர்க்காரின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்பட்டதா ?

(ஆ) இக் கருத்துக்களின் மீது நம் ராஜ்ய சர்க்காரால் பரி சீலனை செய்யப்பட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்ட நடவடிக்கை களின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir.

(ஆ) The matter is under examination.

Union official language

* 59 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have made any further representation to the Union Government regarding the Union official language?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

[9th August 1960

SRI A. A. RASHEED: May I know whether the Government have received any assurance from Union Government that English will be retained as Union Official Language even after 1965?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Presidential Order makes reference to that and more than that the Prime Minister of India has given an assurance on the floor of Parliament.

Mettur Dam

*** 60 Q.—SRI P. G. MANICKAM:** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மேட்டூர் அணை கட்டியதற்குப் பிறகு அணைக்கட்டில் தேக்கி வைப்பதற்கான அளவுக்கு மேல் தண்ணீர் நிரம்பிய காரணத்தால் அணைக்கட்டுக்கே ஏற்படும் அபாயங்களை தவிர்ப்பதற்காக சர்க்காரால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI P. KAKKAN: The Mettur Dam is designed for an F.R.L. of 790 00 and M.W.L. of 796.00 and waters are stored only up to F.R.L. Therefore the question of storing to levels higher than the designed F.R.L. and consequent damages to the Dam does not arise.

SRI P. G. MANICKAM: அளவுக்கு மேலே அந்த அணைக் கட்டிலே தண்ணீர் வந்துகொண்டிருக்கும்போது அபாயம் ஏற்படும் என அநேக தடவை சர்க்கார் பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறது. ஆகையால், அவ்வாறு அளவுக்கு மேலே தண்ணீர் வரக்கூடிய சந்தர்ப்பத்திலே அந்தத் தண்ணீரை ஒரு பக்கம் சேமித்து வைத்து, விவசாயத்திற்குக் கொடுப்பதற்கான திட்டம் ஏதாவது சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI P. KAKKAN: மேட்டூர் அணைக்கட்டுக்கு அபாயம் வராத முறையில்தான் அது கட்டப்பட்டிருக்கிறது. 60 அடி நீளம், 20 அடி அகலம் உள்ள 16 ஸ்லூயிஸ்கள் ஒரு பக்கம் இருக்கின்றன. இன்னொரு பக்கம், 716 அடி நீளமுள்ள தண்ணீர் விடுவதற்கான வழியும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், எப்பொழுதும் அங்கு ஆபத்து இல்லை என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டூர் அணையிலிருந்து அதிகமான அளவு தண்ணீர் வெளியே விடும்போதுதான் கீழே இருக்கும் பகுதிகளுககு அபாயம் இருக்கும். அப்பொழுதுதான் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

SRI S. LAZAR: மேட்டூர் அணையை மேற்கொண்டு பத்து அடி உயரமாகக் கட்டமுடியும் என்று ஆராய்ச்சி செய்து நமது அரசாங்கத்தின் ஒருசில இன்ஜினியர்கள் சொல்லிய கருத்து